# நான் என்ன செய்யவேண்டும்?

**க்குமுன்னர் டிவிஓ விதிக்கப்பட்டவர்களுக்கு:**
நாடுமுழுவதும் உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எந்த நேரத்திலும் உங்கள் டிவிஓ வை வெளிப்படுத்த நீங்கள் முடிவு செய்யலாம்.

25
நவெம்பர்
2017

அவுஸ்திரேலியாவிலுள்ள எந்தவொரு உள்ளூர் நீதிமன்றுக்கும் விண்ணப்பிப்பதன் மூலம் இதை நீங்கள் செய்யலாம். உங்களுக்கான கட்டளையைப் பிறப்பித்தது, மாநிலம் அல்லது பிரதேசத்திலுள்ள ஒரு நீதிமன்றமாக இருக்கவேண்டியதில்லை.

அவுஸ்திரேலியாவின் இன்னொரு மாநிலம் அல்லது பிரதேசத்திற்குப் பிரயாணம் செய்யவோ அல்லது அதனுள் வசிக்கவோ நீங்கள் விரும்பாவிட்டால், உங்கள் கட்டளையை வெளியிட நீங்கள் விரும்பாமல் விடலாம். எந்த மாநிலத்தில் அல்லது பிரதேசத்தில் டிவிஓ விடுக்கப்பட்டதோ அங்கே நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள்.

**இல் அல்லது அதற்குப் பின்னர் டிவிஓ விடுக்கப்பட்டவர்களுக்கு:**
உங்களது டிவிஓ தானாகவே நாடுபூராவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நீங்கள் மேலதிக நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டியதில்லை.

25
நவெம்பர்
2017

# மேலும் தகவல்கள்

நீங்கள் ஏதாவது மேலதிக நடவடிக்கை யெடுக்க வேண்டுமாவென உங்களுக்கு நம்பிக்கையாகத் தெரியாதிருந்தால், அல்லது மேலும் கேள்விகள் உங்களுக்கு இருந்தால், உங்களது மாநிலம், பிரதேசத்திற்குப் பொருந்தமான தகவல்களுக்காக **www.ag.gov.au/ndvos** க்கு வருகை தரவும் அல்லது உங்கள் உள்ளூர் நீதிமன்றுடன் தொடர்புகொள்ளவும்.

தேசிய வன்முறை கட்டளைத் திட்டத்தின்கீழ் 25 நவம்பர் 2017 க்கு முன் விக்டோரியாவில் விடுக்கப்பட்ட செயற்படக்கூடிய எல்லா குடும்ப வன்முறை கட்டளைகளும் தானாகவே அங்கீகரிக்கப்படும் என்பதனைக் குறித்துக்கொள்வது முக்கியமானதாகும்.

Initiative of

ACT Government · NSW Government · Northern Territory Government · Queensland Government · Government of South Australia · Tasmanian Government · Victoria State Government · Government of Western Australia

Australian Government

**www.ag.gov.au/ndvos**

# தேசிய நிறைவேற்றல்

**வீட்டு வன்முறைக் கட்டளைகள் பற்றி**

## தேசிய வீட்டு வன்செயல் கட்டளை அறிமுகப்படுத்தப்பட்டது

தமிழ் / Tamil

National Enforcement of Domestic Violence Orders

**www.ag.gov.au/ndvos**

தேசிய
நிறைவேற்றல்

வீட்டு வன்முறைக் கட்டளைகள் பற்றி

# பாதிப்புக்குள்ளானோர் பாதுகாப்பு

பாதிப்புக்குள்ளானோர் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கான பாதுகாப்பினை இந்தத் தேசிய வீட்டு வன்செயல் கட்டளைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அவுஸ்திரேலியாவின் ஏனைய மாநிலம் அல்லது பிரதேசத்தில் உங்கள் டிவிஓ நிறைவேற்றப்படுவதற்காக இனிமேல் நீங்கள் அதைப் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிக்கத் தேவையில்லை.

நவம்பர் 25, 2017 க்கு முன்னர் கொடுக்கப்பட்ட டிவிஓ ஒன்றினை தற்போது நீங்கள் வைத்திருந்தால், நீதிமன்றுக்கு விண்ணப்பித்து அதனைத் தேசியமட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக கொண்டுவரலாம்.

தேசியமட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட டிவிஓ ஒன்றினை அது எங்கிருந்து விடுக்கப்பட்டது என்பதனைக் கருத்திலெடுக்காது அவுஸ்திரேலியா முழுவதிலுமுள்ள உள்ளூர் நீதிமன்றுகள் அதனைத் திருத்தலாம்.

டிவிஓக்கள் எப்போது விடுக்கப்பட்டது என்பதைக் கருத்திலெடுக்காது, தமது மா நிலம் அல்லது பிரதேசத்தில் விடுக்கப்பட்ட அனைத்து டிவிஓக்களின் நிபந்தனைகளையும் உள்ளூர் பொலிசார் இனியும் நிறைவேற்றுவார்கள்.

வீட்டு வன்செயலால் துன்பப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட குடும்ப அங்கத்தவர்களைப் பாதுகாப்பதற்கான தற்போதய மாநில மற்றும் பிரதேச சட்டங்கள் மாறவில்லை.




# பின்புலம்

குடும்ப, வீட்டு வன்முறை ஏற்றுக்கொள்ளப்படமுடியாததாகும். பாதிக்கப்பட்டோர் பாதுகாப்பு முக்கியமானது.

வீட்டு வன்முறைப் பாதிப்புக்குள்ளானோரின் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு நாடுமுழுவதும் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில், வீட்டு வன்செயல் கட்டளைகள் (டிவிஓ கள்) விடுக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட மாநிலம் அல்லது பிரதேசத்தில் மட்டும்தான் பிரயோகிக்கப்பட்டது.

அது இப்போது மாறிவிட்டது.

தேசிய வீட்டு வன்செயல் கட்டளைத் திட்டம் 25 நவம்பர் 2017 இல் ஆரம்பித்தது. 25 நவம்பர் 2017 இருந்து விடுக்கப்பட்ட அனைத்து டிவிஓ களும் தற்போது தானாகவே தேசியரீதியாக அங்கீகரிக்கப்பட்டும், நிறைவேற்றப்படக்கூடியதாகவும் உள்ளது.

# நிறைவேற்றும் டிவிஓ க்கள்

டிவிஓ ஒன்றினது நிபந்தனைகளுக்கு நீங்கள் பணியாமல் விட்டால் அது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்.

மாநில அல்லது பிரதேச எல்லைகளால் ஒரு டிவிஓ ஒருபோதும் மட்டுப்படுத்தப்படாது. விடுக்கப்படும் ஒரு டிவிஓ வானது அவுஸ்திரேலியா முழுவதும் பிரயோகிக்கப்படும்.

---

உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் ஒரு டிவிஓ வானது இடையீட்டு கட்டளை, குடும்ப வன்முறை கட்டளை, வீட்டு வன்முறை ஏற்படலாமென்ற எண்ணத்தில் பெறப்படும் கட்டளை அல்லது பாதுகாப்புக்கான கட்டளையென அழைக்கப்படலாம்.

---

நாம் இப்போது அவுஸ்திரேலியர்களை திறம்பட பாதுகாக்க முடியும்.
**www.ag.gov.au/ndvos**